# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU

| SESSIONS CASE No. | 289 | of | 2014 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 8 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| பெயர் | K.Kalyanakumar | வயது | | இனம் | |
|---|---|---|---|---|---|
| தகப்பனார் /கணவர் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 20th day of August 2026

நாள் :- 20.08.2026 அ.சா. 8 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது பேரவலூர் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 08.01.2013 ம் தேதி கல்பாக்கம் காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசாமி என்பவர் சுஷ்மா அழகு வடிவேல் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று கல்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்.6/2013 Sec. 509, 506(i) of IPC r/w Sec.4(1) of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்தார். நான் வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான PRP Laboratories சென்று இரவு 7.30 மணிக்கு சாட்சிகள் முனியசாமி, ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை

மகசர் அ.த.சா.ஆ.5 ஆகும். மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆகும். பின்னர் சாட்சிகள் சுஷ்மா அழகுவடிவேல், அழகு வடிவேல், பிரேமகுமாரி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.01.2013 ம் தேதி சிவசங்கரி மற்றும் நித்யாதேவி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு நான் பணி மாறுதலில் சென்றதால் ஆய்வாளர் வெங்கடாசலம் அவர்களிடம் கோப்பினை ஒப்படைத்து விட்டு சென்றேன்.

**குறுக்கு விசாரணை**

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU**

| SESSIONS CASE No. | 289 | of | 2014 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 9 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | Venkatachalam | வயது | | இனம் | |
| தகப்பனார் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 20th day of August 2026

நாள் :- 20.08.2026 அ.சா. 9 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது தாம்பரம் மாநகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சிட்லப்பாக்கம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணி செய்து 30.04.2022 ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 14.03.2013 ம் தேதி நான் கல்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது என் முந்தைய காவல் ஆய்வாளர் திரு.கல்யாணகுமார் அவர்களால் விசாரிக்கப்பட்டு மேல் விசாரணைக்காக கோப்பை நான் எடுத்துக்கொண்டு இந்த வழக்கில் வாதி மற்றும் பாதிக்கப்பட்ட திருமதி.சுஷ்மா அழகுவடிவேல் மற்றும் அவரது கணவர் அழகு வடிவேல் ஆகியோரை மறு விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட பெண் உத்திரபிரதேசம் மாநிலம், சாரான்பூர் மாவட்டம், ராம்பூர் மணிகார்

தாலுகா, தக்கோடா கிராமம் சேர்ந்தவர் என்றும், அவர் தாழ்த்தப்படட பட்டியலினத்தை சேர்ந்த சமார் வகுப்பை சேர்ந்தவர் என்றும், தான் அந்த பிரிவினை சேர்ந்தவர் என்று தெரிந்தும் தன்னுடைய உயர் அதிகாரியான குமார் சுபரங் சூர், தந்தை பெயர் அபானிநாத் குமார் என்பவரால் தனக்கு பாலியல் வன்கொடுமைக்கு இணையான வார்த்தைகளில் வர்ணிப்பதாகவும், இதைப்பற்றி முந்தைய காவல் ஆய்வாளரிடம் தகவல் தெரிவிக்கவில்லை என்றும், தன்னுடைய திருமண சான்று மற்றும் சாதி சான்றுகளை ஆஜர் செய்தார். அதன் அடிப்படையில் இந்த வழக்கின் சட்டப்பிரிவை 509, 506(i) of IPC r/w Sec.4(1) of TNPHW Act லிருந்து Sec.509, 506(i) r/w Sec.3(1) (ix) of SC/ST (PoA) Act சட்டப்பிரிவை மாற்றி மாறுதல் அறிக்கையை நீதித்துறை நடுவர், திருக்கழக்குன்றம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். பிரிவு மாறுதல் அறிக்கையின் படி வழக்கு விசாரணையை உரிய அதிகாரிக்கு மாற்றுவதற்காக காவல் கண்காணிப்பாளர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.C.No.G1/2141/2013 dated 14.03.2013 ன் படி வழக்கு நாட்குறிப்பினை மேல்விசாரணைக்காக துணை காவல் கண்காணிப்பாளர், மாமல்லபுரம் உட்கோட்டம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். செயல்முறை ஆணை அ.த.சா.ஆ.8 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu